**தலைப்பு – 332 தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளையும் அவதானிப்புக்களையும் உள்ளடக்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தின. விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 30 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயன்முன்னேற்றம் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக பேணுவதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அமைச்சின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான

சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(ஈ) பிரிவு பின்வரும் தேவைப்பாடுகளிற்கான குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

(அ) திணைக்களத்தால் முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என கூற முடியாதிருந்தது.

(ஆ) திணைக்களத்தால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| i | 2018 நவம்பர் 21 ஆம் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 7(vi) ஆம் பிரிவின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்றானது திறைசேரியின் நிதிக் கூற்றுக்களின் மீதிகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட வேண்டும். திறைசேரியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீண்டெழும் செலவினம் ரூபா 134,549,494 ஆக இருந்தது. எவ்வாறாயினும், ரூபா 30,345 ஆன வீழ்ச்சியுடன் ரூபா 134,519,149 ஆக இருந்தது. | 2018 நவம்பர் 21 ஆம் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேணடும். | நிதிச் செயலாற்றல் கூற்று படிவம் ஏசீஏ-எவ இல் உள்ளடக்கப்பட்ட ரூபா 30,100,634 தொகையான பொருட்கள் மற்றும் செவைகள் மீதான செலவினம் திணைக்கள கணக்கப் புத்தகங்களுடன் திருத்தப்பட்டுள்ளது. வித்தியாசம் ரூபா 30,345 இந்த திணைக்களத்தால் வழங்கப்பட்ட உத்தரவாதங்கள் மீதான செலவினங்கள் காரணமாகவும் மாதாந்த பொழிப்புகள் ஊடாக இலங்கை புகையிரத திணைக்கத்தில் நேரடியாக வரவு வைக்கப்பட்டமையாலும் இருந்தது. |
| ii | மேற்குறித்த அவதானிப்பு (அ) இன் காரணமாக கட்டுநிதி கணக்கு மீதி ரூபா 212,902,952 ஆக இருக்க வேண்டிய போதிலும் இது ரூபா 30,345 ஆன அதிகரிப்புடன ரூபா 212,933,299 ஆக காட்டப்பட்டது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய அரச கணக்குகள் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | |

### 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு விடயம் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| i. நிதிநிலைமைக் கூற்று மற்றும் ACA 6 படிவம் என்பவற்றின் பிரகாம் நிதிநிலைமை கூற்று பவடி கூற்றின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் உள்ளடங்கிய வாகனங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 32,217,000 ஆக இருந்தது. கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், திணைக்களத்திற்கு உடமையான மோட்டார் வாகனங்களின் பெறுமதி ரூபா 37,300,000 ஆக இருந்தது. இதன்படி, ரூபா 5,083,000 தொகையான வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களிற்கு எடுக்கப்பட்டிருக்காத நிலையான சொத்துக்களின் பெறுமதி சரியாக நிதிக்கூற்றுக்களிற்கு எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்விற்கு கிடைத்த தகவல்களின் மூலம் மற்றும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட தகவல்கள் தெளிவாக இருக்கவில்லை. |

### 1.6.3 காசுப்பாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளபபடுகின்றன.

| கணக்காய்வு விடயம் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கணக்காய்வற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், செயற்பாட்டு நடவடிக்கையில் இருந்தான காசுப்பாய்ச்சல் ரூபா 629,335,630 ஆக பதியப்பட்டிருந்தது அத்தகையவாறு திறைசேரி கட்டுநிதி ரூபா 479,106,000 ஆகவும் ஏனைய பெறுவனவுகள் ரூபா 4,658,795 ஆகவும் வைப்புக்களின் பெறுவனவு ரூபா 145,570,835 ஆகவும் பதியப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்பாட்டு நடவடிக்கையில் இருந்தான காசுப்பாய்ச்சல் ரூபா | 2018 நவம்பர் 21 ஆம் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | 2018 நவம்பர் 21 ஆம் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் தயாரித்தலின் அறிவுறுத்தலின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்ட சகல பெறுமதி மற்றும் சுற்றறிக்கையின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் பணிப்பாளர் நாயகத்தால் தொலைபேசியில் அழைத்து வழங்கப்பட்ட வாய்வழி அறிவுறத்தலின் பிரகாரம், சகல பெறுமதிகளும் காட்டப்பட்டது. எனவே அரச கணக்குகள் |

| | | |
|---|---|---|
| 28,005,213 குறைவுடன் காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 601,330,417 ஆக காட்டப்பட்டிருந்தது. | | பணிப்பாளரிடமிருந்து தெளிவுபடுத்தல்களை பெறுவதற்கும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட வித்தியாசங்கள் தொடர்பில் மேலும் விசாரணைகள் பெறுவதற்கும் நான் ஆலோசனை வழங்கியிருந்தேன். |
| (ஆ) காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைக்காக ஏற்பட்ட காசுப்பாய்ச்சலாக ரூபா 134,544,949 காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம் ஆளணி வேதனங்கள் மற்றும் செயற்பாட்டு செலவினமாக ரூபா 157,652,792 உம், மாற்றங்களாக ரூபா 242,937,612 உம் வைப்புக்களின் திருப்பிச் செலுத்தல்களாக ரூபா 217,486,100 உமாக ரூபா 623,076,304 ஆக காட்டப்பட்டிருந்தது. இதன்படி, வித்தியாசமாக ரூபா 488,531,355 இருந்தது. | மேற்குறிப்படப் பட்டவாறு | |
| (இ) முதலீட்டு நடவடிக்கையில் இருந்தான காசுப்பாய்ச்சாக எந்தப் பெறுமதியும் காட்டப்பட்டிருக்கவில்லை. கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் ரூபா 4,895,338 தொகையான முற்பணங்களின் அறவீடு குறைவாக காட்டப்பட்டது. | | |
| (ஈ) முதலீட்டு நடவடிக்கையில் ஏற்பட்ட காசுப்பாய்ச்சலின் கீழ் பௌதீக சொத்துக்கள் கொள்வனவு மற்றும் நிர்மாணம், ஏனைய முதலீடுகளின் கீழான காணிக் கொள்வனவு என்பவற்றிற்காக ரூபா 280,362,796 ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் பௌதீக சொத்தக்களின் கொள்வனவிற்காக ரூபா 78,383 உம் முற்பணக் கொடுப்பனவிற்காக ரூபா 11,076,282 உமாக ரூபா 11,154,665 ஏற்பட்டிருந்தது. அத்தகையவாறு ரூபா 269,208,131 ஆன வித்தியாசம் இருந்தது. | | |

**1.6.4 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

---------------------------------------------------------------------------

கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் போது பின்வரும் பிணை வைப்பு பதிவேடு திணைக்களத்தால் பேணப்பட்டிருக்கவில்லை மற்றும் வாகன சம்பவக் குறிப்பு புத்தகங்களும் நாளதுவரையாக வைத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு விடயம் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | ---------------------------------- | ------------------------ | ---------------------------------- |
| **(அ)** | **பிணை வைப்பு பதிவேடு** | | |
| | பிணைவைப்பு வழங்குவதற்கு வேண்டப்பட்ட உத்தியோகத்தர்களின் பெயர்களை பிணை வைப்பு பதிவேடு கொண்டிருக்கின்ற பிணைவைப்பு பதிவேடு பேணப்பட்டிருக்கவல்லை. | நிதிப்பிரமாணம் 895(1) இன் பிரகாரம் பிணை வைப்பு பதிவேடு பேணப்பட வேண்டும். | பிணை வைப்புகள் வைப்பதற்காக அரச கணக்குகள் திணைக்களத்திடம் இருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டன. எவ்வாறாயினும், 1999.04.19 ஆந் திகதிய 01/99 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மாவட்ட செயலாளர்கள் மற்றும் அரசாங்க முகவர்களிற்காக இருந்தது. |
| **(ஆ)** | **வாகன சம்பவ குறிப்பு புத்தகம்** | | |
| | திணைக்கள வாகனங்களின் சம்பவ குறிப்பு புத்தகங்கள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில் லை. வாகனங்களின் விபரங்கள், எரிபொருள் நுகர்வின் போது ஏற்பட்ட செலவினம், மோட்டார் வாகனங்களின் திருத்த செலவினம் என்பவன ஒவ்வொரு வாகனங்கள் தொடர்பிலும் இணங்கியிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 1645(அ) இன் பிரகாரம் வாகனங்களின் சம்பவ குறிப்பு புத்தகங்கள் நாளதுவரையாக்கி பேணப்பட்டிருக்கவில்லை | வாகனங்களின் சம்பவ குறிப்பு புத்தகங்கள் தொடர்பில் குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் திருத்தப்பட்டிருந்தன |

**1.6.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை கிழே பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | அவதானிப்பு<br>இணங்காமை | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துகைள் |
|---|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | | |
| (அ) | நிதிப்பிரமாணம் 571(3) | ரூபா 4,842,839 கூட்டுத் தொகையான வைப்புக்கள் திணைக்களத்தின் பொது வைப்புக்கள் தொடர்பில் தீர்ப்பனவு செய்யப்படாமல் அல்லது அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்காமல் இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக வைப்புக் கணக்கில் இருந்தது. . | நிதிப்பிரமாணம் 571 இற்கமைய செயற்பட வேண்டும். | இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக வைப்புக் கணக்கில் இருந்த நிதிகளில் சம்பந்தப்பட்ட நபர்களிற்கு தற்போது கொடுப்பனவுகள் செய்யப்படுகின்றன. |
| (i) | நிதிப்பிரமாணம் 104 | திணைக்களத்தின் பாதுக்க அலுவலகம் மற்றும் நுவரெலியா பொறுப்புடைய உத்தியோகத்தர் என்பவற்றில் கணனி உபகரணங்களின் பெறுமதி ரூபா 189,358 நட்டம் ஒரு ஆண்டிற்கு மேலாக காலாவதியாகியிருந்தது. எவ்வாறாயினும், இந்த விடயம் தொடர்பான புலனாய்வுகள் இன்னமும் தொடருகின்றன. அநுராதபுரம் பொறுப்புடைய உத்தியோகத்தர் அலுவலகத்தில் 2018 நவம்பர் 18 இல் ஏற்பட்ட விபத்து இழப்புக்களின் நிர்ணயிப்பு மீளாய்வாண்டு இறுதிவரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை . . | நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பில் நிதிப் பிரமாணங்களிற்கு அமைய செயற்பட வேண்டும். | நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் இரண்டு வழக்ககளும் நுவரெலியா மற்றும் அவிசாவல நீதவான் நீதி மன்றத்தில் தொடரப்பட்டிருந்தன. பொறுபபுடைய நபர்களை நீக்கப்பட முடியவில்லை. தீர்மானங்கள் எடுக்கப்படும். உரிய பொலீஸ் நிலையத்துடன் வழமையான ஒத்துழைப்புகளுடன் தொடருகின்றன. நிதிப்பிரமாணம் 104 இன் படி விபத்துக்களிற்கான புலனாய்வு 2019 மார்சில் தொடங்கப்பட்டது. விபத்துக்களிற்கான ஆரம்ப விசாரணைகள் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பூர்த்தியாக்கப்பட்டதுட |

| | | | |
|---|---|---|---|
| | | | ன் இறுதி அறிக்கைகள் நியமிக்கப்பட்ட குழுவிடமிருந்து பெறவேண்டும். . |

**(ஆ) அரச நிதிச் சுற்றறிக்கை**

| | | | |
|---|---|---|---|
| 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க சுறறறிக்கையின் 3.2.3 மற்றும் 3.2.4 ஆம் பிரிவுகள் | கணிப்பீட்டு சபையின் அறிக்கையிற்கமைய ஒவ்வொரு நிதியாண்டிலும் ஏப்ரல் 15 அல்லது அதற்கு முன்னர் மிகைகள், குறைவுகள் மற்றும் குறைபாடுகள் மீதான அறிக்கைக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே இது 2019 ஏப்ரல் 31 வரையும் செய்யப்பட்டிருக்கவில்லை. | 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க சுறறறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டுமு. | 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க சுறறறிக்கையின் 3.2.4 ஆம் பிரிவின்படி 2018 ஆம் ஆண்டிற்கான பௌதீக கணிப்பீட்டு சபையின் பூர்த்தியாக்கல் திகதி 2019 மார்ச் 31 வரை உள்ளது. கணிப்பீட்டுச் சபையானது அத்திகதிக்கு முன்னர் பூர்த்தியாக்கப்பட்டது. எவ்வாறாயினும், வழமையில் நாட்டில் நிலவுகின்ற சாதகமற்ற நிலைமை காரணமாக மாவட்ட அலுவலகங்களால் திணைக்களத்திற்கு அறிக்கைகள் சமர்ப்பிப்பதற்கு தாமதப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கணிப்பீட்டுச் சபை அறிக்கைகள் பெறப்பட்டிருந்தது. |

**(இ) நிதி அமைச்சு சுற்றறிக்கை**

---------------------------------------

| | | | |
|---|---|---|---|
| 2017 யூன் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் 7 ஆம் பிரிவு | நிறுவனத்திற்கு உடமையான சகல சொத்துக்களின் விபரங்களும் கட்டுப்பாட்டு பணிப்பாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும். எவ்வாறாயினும் 2019 மார்ச் 20 வரை இது செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை யிலுள்ள ஏற்பாடு களுக்கமைய செயற்பட வேண்டும். | நிதி மற்றும் ஊடகதுறை அமைச்சின் 2017 யூன் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் 7 ஆம் பிரிவின்படி, 2018 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட சொத்தக்கள் 2019 மார்ச் 21 இல் கட்டுப்பாட்டு பணிப்பாளருக்கு |

சமர்ப்பிக்க வேண்டும்.

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துகைள் |
|---|---|---|---|
| (அ) | **செய்யப்பட்ட ஏற்பாடுகளை தவிர்த்தல்** | | |
| | மூலதன செலவின மற்றும் மீண்டெழும் செலவினங்களிற்காக செய்யப்பட்ட ரூபா 3.20 மில்லியன் தொகையான ஏற்பாடுகள் பயன்படுத்தப்படாமல் முழுயைாக சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இற்கமை செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | i. 332-1-1-1303-11 கட்டிட உடமையாளர் மற்றும் திணைக்களத்திற்கு இடையில் கைசாத்திட்ட குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம், கட்டிட உரியையாளரால் ரூபா 50,000 இற்கு மேலான கிரயம் பராமரிப்பில் இடம்பெறுவதற்கு உடன்பட்டிருந்ததுடன் அதனைவிடக் குறைவாக திணைக்களத்தால் ஏற்பட வேண்டியிருந்ததுடன் ஆனால் கட்டிட பராமரிப்பு கிரயம் சேமிக்கப்பட்டமையால் ரூபா 50,000 எவ்வித செலவினமும் ஏற்படவில்லை.<br><br>332-1-1-1703-11<br>2018 ஆம் ஆண்டில் மொழிப் படி கொள்கையின் கீழான கொடுப்பனவிற்கான கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் சமர்ப்பிக்காமையால், ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டது.<br><br>ii. அந்த ஏற்பாடுகள் நிதி மூலதனத் தன்மையான செலவினத்திற்கு திறைசேரியின் இயலாமையால் சேமிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | **மிகையாக கிடைத்த ஏற்பாடுகள்** | | |
| | மேற்குறிப்பிட்ட நிதிகளை பயன்படுத்திய பின்னர் 09 மீண்டெழும் செலவின விடயங்களின் கீழான மிகை ஏற்பாடுகள் காரணமாக, கிடைத்த நிதிகளில் 20 சதவீதம் முதல் 50 சதவசீதம் வரையிலான வீச்சில் மேற்குறிப்பிட்ட | நிதிப்பிரமாணம் 50 இற்கமை செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | i. கொடுப்பனவுகள் உறுதிச்சீட்டுகள் ஊடாக செய்யப்பட்டிருந்த பொதிலும், 2018 திசெம்பரில் போதிய கட்டுநிதி விடுவிக்கப் |

| | | |
|---|---|---|
| ஏற்பாட்டு சேமிப்புகள் இருந்தன. . | | பட்டிருக்கவில்லை. எனவே கொடுப்பனவு செய்வதற்கு இயலாமையால் ஏற்பாடுகள் சேமிக்கப்பபட்டிருந்தது.<br><br>ii. மாவட்ட அலுவலகத்திற்கு காகிதாதிகள் கவனமாக வழங்குதல் ரேதிய பதவியணி இன்மையால் பட்டியல்கள் கிடைக்காமை, நிறைவேற்று உத்தியோகத்தர்களின் வெறறிடங்கள் இருந்த 231 ஆக காரணங்களாக குறிப்பிடப்பட்டிருந்தது. |

## 2.2 உப கட்டுநிதி வழங்குதலும் தீர்ப்பனவு செய்தலும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துகைள் |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணங்கள் 371(5) இன் பிரகாரம், வழங்கப்பட்ட உப கட்டுநிதி நோக்கம் நிவைடைந்த பின்னர் 10 நாட்களிற்குள் தீர்க்கப்பட வேண்டும் எவ்வாறாயினும், 7 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 112,500 கூட்டுத் தொகையான முற்பணங்கள் 3 மாதங்கள் முதல் 10 மாதங்கள் வரையான தாமதத்துடன தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 371(5) பிரிவுடன் இணங்குதல் | சகல மாவட்ட அலுவலகம் மற்றும் நிறைவேற்றுப் பதவி உத்தியோகத்தர்கள் உடனடியாக பெறப்பட்ட கட்டுநிதியை தீர்ப்பதற்கு 2018.12.18 ஆந் திகதிய DNCWS/FD/01/14 ஆம் இலக்க என்னுடைய கடிதம் மூலம் அறிவித்திருந்தார். தற்போதைய படிமுறைகள் வேலைகள் பூர்த்தியான பின்னர் உடனடியாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துகைள் |
|---|---|---|
| 2014 ப்பெரவரி 14 ஆந் திகதி 2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், 2018 ஆம் ஆண்டிற்கான செயல் | சுற்றறிக்கையின் பிரகாரம், வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட | 2014 ப்பெரவரி 14 ஆந் திகதி 2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், செயல் நடவடிக்கை திட்டம் தயாரிப்பதற்காக ஒதுக்கிய படிவத்தில் வழங்கப்பட்டிருகாததுடன் இதன்படி |

| | |
|---|---|
| நடவடிக்கை திட்டம் தயாரித்திருக்கவில்லை. | வேண்டும். | மேற்குறிப்பப்பிடப்பட்டவற்றில் உள்ளடக்கபட வேண்டியிருந்தது. எனவே, வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம் தயாரித்தலீற்காக 2015.10.14 ஆந் திகதிய MN PEA/PLN/APG/15 ஆம் இலக்க கடிதம் மற்றும் 2015.09.20 இல் எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மாணம் என்பவற்றின் படி கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு செயலாளரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் பிரகாரம், 2018 ஆம் ஆண்டிற்காக வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம் தயாரித்தல் குறிப்பிடப்பட்ட படிவத்தை பயன்படுத்தி தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரதியொன்று உங்களிற்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த படிவத்தில் 2014.்.01 சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தது. |

## 3.2 கைவிடப்பட்ட செயற்திட்டக்கள்

---------------------------------------

பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துகைள் |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் திணைக்களத்தின் கீழ் பதியப்பட்ட 18 மாவட்டங்களில் சமுதாய அடிப்படை அமைப்புக்களால் அமுலாக்கப்பட்ட 222 நீர் வழங்கல் செயற்திட்டங்கள் செயற்பாடற்று இருந்தன. | செயற்பாடற்ற செயற்திட்டங்களை மீளச் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். . | இந்த திணைக்களம் அந்த செயற்திட்டங்களை ஒழுங்குபடுத்துவதற்கு 2014 இல் தாபிக்கப்பட்டது. திணைக்களத்தின் கீழ் பதியப்பட்ட அதிகமான நீர் செயற்திட்டங்கள் முறையான பராமரிப்ப மற்றும் செயற்பாட்டு நடைமுறைகளை பின்பற்றியிருக்காததுடன் திணைக்களம் இனங்கண்டிருந்த பிரச்சனைகளை தீர்த்திருந்தது. இதன்படி, அதிகமான நீர் செயற்திடடங்கள் புதுப்பிக்கப்பட்டதுடன் திணைக்களத்தினுடைய ரூபா 200 மில்லியன் மற்றும் வேறு செயற்திட்டங்களின் ஒதுக்கீடுகள் என்பவற்றிற்குள் தரமுயர்த்தி இருந்தது. இருக்கின்ற நீர் செயற்திட்டங்களின் பராமரிப்பை போல செயற்பாடற்ற நீர் செயற் திட்டங்களிற்காகவும் ஒதுக்கீடுகளை வைத்திருந்தது. சம்பந்தப்பட்ட அபிவிருத்தி வேலைகளும் மேற் கொள்ளப்பட்டிருந்தது. அந்த சகல செயற்திட்டங்களும் இன்னொரு தரப்பினரால் அமுலாக்கப்பட்டதுடன் |

| | | |
|---|---|---|
| | | 2014 இல் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் கொண்டு வரப்பட்டது. சகல விடயங்களையும் உடனடியாக திருத்துவதற்கு சாத்தியமற்றிருந்தது. |

### 3.3 செயற்திட்ட அமுலாக்கலிலுள்ள தாமதம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துகைள் |
|---|---|---|
| சமுதாய அடிப்படை அமைப்பக்களின் (சீபீஓ) கீழ் அமுலாக்கப்பட்ட மற்றும் தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தால் தொடங்கப்பட்ட ரூபா 57,767,542 கிரயத்திலான 33 செயற்திட்டங்கள் 2018 மே 31 வரையும் பூர்த்தியாக்கப் பட்டிருக்கவில்லை. | திட்டமிடப்பட்டவாறு செயற்திட்டங்களை பூர்த்தியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அந்த சகல 33 செயற்திட்டங்கள் 2018 இல் அமுலாக்குவதற்காக அனுமதிக்கப்பட்டிருந்ததுடன் 2019 அளவில் பூர்த்தியாக்குவதற்கு இயலாதிருந்தது எனவே, 2019 ஆண்டிற்கு வேறுபட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டிற்காக செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டதுடன் அதன்படி நிறைவெற்றப்பட்ட செயற்திட்டங்கள் உள்ளதுடன் செயற் திட்டங்களிற்காக ஒதுக்கப்பட்ட சேமிப்பகளின் அடிப்படையில் நிறைவேற்ற வேண்டுமென அனுமதிக்கப்பட்டது. ஆகவே, அந்த செயற்திட்டங்கள் 2018 ஆம் ஆண்டில் பூர்தியாக்கப் பட்டிருக்காததுடன் அவற்றினை 2019 இல் பூர்த்தியாக்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தது. |

### 3.4 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துகைள் |
|---|---|---|
| 2002 செப்தெம்பர் 12 இன் 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களிற்குள் திணைக்களத்தால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மீளாய்வாண்டு மற்றும் | அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2017 செயலாற்றல் அறிக்கை மூன்று மொழிகளிலும் மொழிபெயர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அடுத்த மூன்று வாரங்களிற்குள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நான் நடவடிக்கை எடுப்பேன். |

முன்னைய ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றல் அறிக்கை 2019 மே 31 வரையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 சொத்துகள் முகாமைத்துவம்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துகைள் |
|---|---|---|---|
| | **பயன்படுத்தப்படாத வாகனங்கள்** | | |
| (அ) | திணைக்களத்திற்க சொந்தமான நான்கு வாகனங்கள் ஓடாமல் திணைக்கள வளவில் தரித்துவிடப்பட்டிருந்தது என 2019 ஏப்ரல் 25 நடாத்தப்பட்ட பௌதீக மெய்மையாய்வில் வெளிப்பட்டது. | திருத்தம் செய்வதற்கு சாத்தியமற்றிருக்குமாய ின் வாகன அணியை ஏலத்திற்கு விடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஓடுவதற்கு ஈடுபடுத்தப்பட்ட நான்கு வாகனங்களில் ஒன்று திருத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் நிதிப்பிரமாணம் 104 இன் கீழான நடைமுறைகள் பூர்த்தியான பின்னர் இன்னொரு வாகனம் தொடர்பான நடவடிக்கைகள் எடுத்தல் தொழில்நுட்ப உத்தியோகததரின் தீர்மானம் எடுதத பினனர் மற்றும் ஏனைய வாகனங்களின் கைதவிர்ப்பு பிரச்சனைகளை தீர்த்த பின்னர் இரண்டு வாகனங்களை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| | **வேறு அரசாங்க நிறுவனங்களிற்கு சொந்தமான வாகனங்களின் பயன்பாடு** | | |
| (ஆ) | தேசிய சமுதாய மற்றும் நீர் வழங்கல் திணைக்களத்தால் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சின் சமுதாய நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டத்தின் பதின்மூன்று (13) வாகனங்கள் உள்ளடங்கலாக வேறு நிறுவனங்களிற்க சொந்தமான பதினேழு (17) வாகனங்கள் மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்டிருந்தது. | முறைப்படி அந்த வாகனங்களை கையேற்பதற்கோ அல்லது உரிய நிறுவனங்களிற்கு அவற்றினை விடுவிப்பதற்கோ நடவடிககை எடுக்க வேண்டும் | சமுதாய நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டத்திற்கு சொந்தமான 12 வாகனங்கள் மற்றும் தேசிய சமுதாய மற்றும் நீர் வழங்கல் திணைக்களம் தாபித்த பின்னர் அந்நேரத்தில் அவர்கள் திணைக்களத்திற்கு கையளித்தருந்தனர் அந்த வாகனங்களை செயற்திட்டத்தின் மூலதாரராக கருதி திரும்பவும் கையளத்திருந்ததுடன் திணைக்களத்திற்கு அந்த வாகனங்களையும் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் திணைக்களத்திற்கு லுணாவ செயற்திட்டம் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு சொந்தமான இரண்டு வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு ஏற்கனவே ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தது. |

(c) **பயன்படுத்தப்படாத வங்கிக் கணக்குகள்**

| | | |
|---|---|---|
| 2014 செப்தெம்பர் 24 ஆந் திகதிய 1881/6 ஆம் இலக்க இலங்கை சனநாயக சொசலிச குடியரசின் வர்த்தமாணி அறிவித்தலின் கீழ் தேசிய சமுதாய நீர் நம்பிக்கை பொறுப்பின் செயற்பாடுகள் தேசிய சமுதாய மற்றும் வழங்கல் திணைக்களத்திற்கு மாற்றப்பட்டது. தேசிய சமுதாய நீர் நம்பிக்கை பொறுப்பின் கணக்கு ஏடுகளின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,794,454 நிலையான வைப்புக் கணக்கிலும் ரூபா 682,554 நடைமுறைக் கணக்கிலும் பேணப்பட்டிருந்தது. இது திணைக்ளத்திற்கு மாற்றப்படுவதற்கோ அல்லது அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கோ நடவடிக்கை எடுக்காமல் 2019 மே 31 வரை பயனற்றிருந்தது என அவதானிக்கப்பட்டது.<br><br>மேலும், கணக்காய்வால் ஆராயப்பட்ட தகவல்களின் பிரகாரம் இது நிலையான வைப்புக் கணக்கிலும் நடைமுறைக் கணக்கிலும முறையே ரூபா 2,441,575 மற்றும் ரூபா 837,323 ஆக இருந்தது என அவதானிக்கப்பட்டது. | அந்த கணக்கு மீதிகளை திணைக்ளத்திற்கு மாற்றப்படுவதற்கோ அல்லது அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கோ உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். | தேசிய சமுதாய நீர் நம்பிக்கை பொறுப்பின் கீழான நிலையான வைப்புக் கணக்கு மீதியை சுவீகரிப்பதில் நகர திட்டமிடல் மற்றும் உயர் கல்வி அமைச்சிலிருந்து நான் ஆலோசனை பெற்றிருந்தேன் அத்துடன் எதிர்காலத்தில் ஆலோசனை பெற்ற பின்னர் அதன்படி செயற்படுவேன். |

**3.6 அரச உத்தியோகத்தர்களின் பிணைவைப்பு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துகைள் |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணத்தின் 128(1(n) ஆம் பிரிவின் பிரகாரம் பொருத்தமான | நிதிப்பிரமாணங்களிற்கு அமைய செயற்பட வேண்டும். | பிணை வைப்புகள் வைப்பதற்காக அரச கணக்குகள் திணைக்களத்திடம் இருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டன. எவ்வாறாயினும், 1999.04.19 ஆந் |

| | | |
|---|---|---|
| நீதிப்பிரமாணம் மற்றும் சட்டங்களிற்கு அமைய பிணை வைப்புக்களை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் பிணை வைப்பினை செய்ய வேண்டும். எவ்வாறாயினும் திணக்களத்தின் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் அவ்வாறு செய்யப்பட்டிருக்காததுடன நிதிப்பிரமாணம் 891(1) ஆம் பிரிவின் பிரகாரம் பிணை வைப்பு பதிவேடு நாளதுவரை யாக்கப்பட்டிருக்கவில்லை. | | திகதிய 01/99 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மாவட்ட செயலாளர்கள் மற்றும் அரசாங்க முகவர்களிற்காக இருந்தது. |

## 4. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துகைள் |
|---|---|---|
| ‘‘சகலருக்குமான தண்ணீர் நிலைபேறான முகாமைத்தவம் மற்றும் சுகாதார பெறுகைகளை உறுதிபடுத்தல்’’ என்பன தேசிய சமூதாய மற்றும் நீர்வழங்கல் திணைக்களத்தின் நிலைபேறான இலக்குகளாக இனங்காணப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், எந்தவொரு உள்ளக சுற்றறிகைகள், வழிகாட்டல்கள் மற்றும் செயலமர்வுகள் என்பன திணைக்களத்தால் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | திணைக்கள நிலைபேறான இலக்குகளை அடையும் இலக்கை நோக்கி திணைக்களம் வேலை செய்ய வேண்டும் | நிலைபேறான திணைக்கள இலக்குகள் மீது உள்ளக செயலமர்வுகளை நடாத்துதல் மற்றும் சுற்றறிக்கைகளை வழங்குதல் செய்யப்பட்டிருக்காத போதிலும் நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சால் நடாத்தப்பட்ட வழிப்பணர்வு நிகழ்ச்சித் திட்டங்களில் திணைக்கள அலுவலர்கள் பங்குபற்றயிருந்ததுடன் நிலைபேறான அபிவிருத்தியில் நிதி அமைச்சால் வழங்கப்பட்ட சுற்றிக்கைகள் சகல துறைகளிற்கு வழங்கப்பட்டது. |

*M*